அல்வாய்

# அருள்மிகு வரசித்தி விநாயகர் உடனுறை
# காத்தவராயர் தேவஸ்தானம்



## மஹாகும்பாபிஷேக சிறப்பு மலர்
05.04.2023

உ
சிவமயம்
காத்தான் துணை

# அல்வாய்
# அருள்மிகு வரசித்தி விநாயகர் உடனுறை
# காத்தவராயர் தேவஸ்தானம்



**புனராவர்த்தன**
**மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்**
**05.04.2023**

நூல் – அல்வாய் வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தானம்
மலராசிரியர் – க.பரணீதரன்
விலை – 100.00
பக்கம் – 28

## மலரின் உள்ளே

1. சர்வ வல்லமை கொண்ட காத்தான்
– கலாநிதி த.கலாமணி

2.காத்தவராய சுவாமி
– தி.செல்வமனோகரன்

3. சிறுதெய்வ வழிபாடு
– அ.பௌநந்தி

4.சமயச் சின்னங்கள்
– மிதுஷா வரதவேல்

கணக்கு அறிக்கை

# சர்வ வல்லமை கொண்ட காத்தான்

இன்று, அருள்மிகு வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தானத்தில் மகாகும்பாபிஷேகம் இடம் பெறுகின்றது. "காத்தான் கோயில்" என்று அழைக்கப்பட்டு வந்த ஆலயத்தில் வரசித்தி விநாயகர் பிரதிட்டை செய்யப்பட்ட வேளை, வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தானமாக அது பெயர்மாற்றம் பெற்றது. இவ்வகையில், 2011இல் இடம்பெற்ற முதலாவது புனருத் தாரண மகா கும்பாபிஷேகத்தை அடுத்து, பன்னிரு வருடங்களின் பின்பு இடம் பெறும் இரண்டாவது மகா கும்பாபிஷேகம் இதுவாகும். 2011 இல் வெளிந்த மகா கும்பாபிஷேக மலரிலும் 2020 ஆம் ஆண்டு முதல் அலங்கார உற்சவத்தின்போது வெளியிடப்பட்ட "காத்தவராயர் மான்மியம்" சஞ்சிகைகளிலும் ஆலய வரலாறு இடம்பெற்றுள்ளது. எனினும், அவ்வரலாற்றைச் சுருக்கமாக மீள்நோக்குச் செய்வதுடன், இன்றுவரை ஆலயத்தில் ஏற்பட்டுள்ள படிமுறை வளர்ச்சியை நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஆலயத்தின் தோற்றம்**

அல்வாய் தெற்கு (முன்னைய கிராம சேவகர் பிரிவு) கிராமத்தின் வடபால் எல்லையோடு தெற்குப் புறமாக உள்ள பரந்த பிரதேசம் நில உடைமையாளர் களுக்குச் சொந்தமாக இருந்து வந்தது. அந்த நில உடைமையாளர்களின் பெயருடன் இணைத்து அப்பிரதேசத்துக்கு குறித்த நில உடைமையாளரின் குறிச்சி என்ற பெயரே இருந்து வந்தது. இவ்வாறு பேணப்பட்டு வந்த தோம்புகளின் பிரகாரம் காணித் துண்டுகளின் பெயரும் குறிச்சியின் பெயரோடு இணைந்தே காணப்பட்டது. இப்பிரதேசத்தில் ஏறத்தாள இருநூற்றைம்பது ஆண்டுகளின் முன்பு வசித்து வந்த மக்கள் கூட்டத்தினருள் ஒருவர் தான் கதிரன் அவர்கள். அல்வாய் வேலிலந்தை முத்துமாரி அம்மன் இக்காலத்துக்கு சற்று முன்பாகவே தோற்றம் பெற்றிருந்தது. முத்துமாரி அம்மன் ஆலயத்தில் காத்தானும் தாபிக்கப்பட்டு வழிபடப்பட்டு வந்தது. இதன் செல்வாக்கு காரணமாக, தெய்வ நம்பிக்கை உள்ளவரான கதிரன் அவர்கள்

இன்று காத்தான் இருக்கும் அதே இடத்தில் நின்றிருந்த ஒதிய மரமொன்றின் கீழ் சூலங்களை நிறுவி, காத்தானாகவும் பணிக்கராகவும் உருவகித்து வழிபட்டு வந்தார். கதிரனின் உறவினரும் ஊரவரும் கூட இத் தெய்வத்தை வழிபட்டு வரத் தொடங்கினர்.

கதிரனைத் தொடர்ந்து அவர் வழிவந்த பரம்பரையினர் இத்தெய்வத்தை ஆதரித்துத வருகின்றனர். ஆயினும், கதிரன் - காத்தார் - சபாபதி - தம்பிஜயா கலாமணி - பரணீதரன் என்ற தொடர்ச்சியில் ஆறாவது தலைமுறையைச் சேர்ந்த க.பரணீதரன் அவர்களே இன்று இந்த ஆலயத்தின் பூசகராக விளங்கி வருகின்றார். க.பரணீதரன் பொறுப்பேற்ற காலத்தின் பின்னரே ஆலயம் துரிதமாக வளர்ச்சி கண்டது. பரணீதரனின் மனதில் கோயில் பற்றி தோன்றும் காட்சிகளை மெய்யான விடயங்களாக ஆக்கி இன்று இந்த கோயில் வளர்ச்சி கண்டுள்ளது. இதுவரை காலமும் ஏற்பட்டு வந்த ஆலயத்தின் படிமுறை வளர்ச்சி அதிசயிக்கத்தக்கது.

**ஆலயத்தின் படிமுறைவளர்ச்சி (கட்டங்களாக)**

- 250 ஆண்டுகளுக்கு முன்பு கதிரன் என்பவரால் ஒதியமரம் ஒன்றின் கீழ் காத்தான் சூலமும் பணிக்கர் சூலமும் நிறுவப்பட்டது.
- தொடர்ந்து ஆதி விநாயகராக உருவகிக்கப்பட்ட திருத்தண்டு நிறுவப்பட்டது.
- நித்திய விளக்கு வைக்கப்பட்டு, ஆனி உத்தரத்தின்போது பொங்கல் வைத்து மடை பரப்பப்பட்டது.
- கொட்டில் அமைத்து, அக்கொட்டிலில் சூலங்கள் நிறுவி வழிபடப்பட்டது.
- பத்துக்குடும்பத்தினருக்கு பூஜைகள் வழங்கப்பட்டு திருவெம்பாவைப் பூஜை இடம்பெறத் தொடங்கியது.
- சுண்ணாம்பாலான கட்டடம் அமைக்கப்பட்டது. சுண்ணாம்பாலான சுவர் அமைப்பில் சிவதாசன் பங்களிப்பு அளிக்கப்பட்டது.
- சுண்ணாம்புக்கட்டடம் சீமெந்துக் கட்டடமாக மாற்றப்பட்டது.
- டொக்ரர் S.வேலும்மயிலும் அவர்களால் காண்டாமணி உபகரிக்கப்பட்டது.
- மூலஸ்தானக்கட்டடத்தோடு இணைந்ததாய் ஒரு சிறுமண்டபம் அமைப்புக்கு சிறு பங்களிப்பு அரியகுரு புவனேஸ்வரி அவர்களால் உபகரிக்கப்பட்டது.
- 2011இல் ஆலயத்தைப் புனரமைத்து, மூலஸ்தான மண்டபம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் என்பவற்றோடு ஆலயம் புதுப்பொலிவு பெற்றது.

- மூலஸ்தானத்தில் மாபலிபுரத்திலிருந்து தியாக.சோமாஸ்கந்தராஜாக் குருக்களினால் கொண்டு வரப்பட்ட வரசித்தி விநாயகர் பிரதிட்டை

செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் இடம்பெற்றது.

- அருள்மிகு வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தானம் என பெயர்மாற்றம் தியாகஸ்ரீ சோமஸ்கந்தராஜக் குருக்கள் அவர்களால் மேற் கொள்ளப்பட்டது.
- குழாய்க்கிணறு திரு.சீ.இரத்தினேஸ்வரன், சீ.சிவனேஸ்வரன் ஆகியோரால் அமைக்கப்பட்டது.
- மணிக்கோபுரத்துக்கான தூண்கள் டொக்ரர் V.கணேசவேல் அவர்களால் அமைக்கப்பட்டன.

- 2019

- மகாவிஷ்ணு ஆலயம் க.முரளிதரனாலும், வைரவர் ஆலயம் த.கலாமணி அவர்களாலும், வசந்த மண்டபம் க.பரணீதரன் அவர்களாலும் பெரும் நிதிப்பங்களிப்பில் அமைக்கப்பட்டது.
- மகா மண்டபம் விஸ்தரிக்கப்பட்டது.
- அலங்கார உற்சவம் ஆரம்பமானது.

- வெளிமண்டபம் நிறுவப்பட்டது. சுற்றுமதில், சமையல் அறை அமைக்கப்பட்டன.
- வெளிமண்டபத்துக்கான சிறகு மண்டபங்கள், வில்மண்டப கோபுரம் பொன்னையா தருமசோதி அவர்களால், நாகமுத்து தங்கம், பொன்னையா மாணிக்கம் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்டது. கூரைக்கான பனைமரங்கள் தவனேஸ்வரன் தர்மஸ்ரீ அவர்களால் வழங்கப்பட்டது.
- சிறகு மண்டப 6 திருவாசி வளைவுகள் க.பரணீதரனால் அமைக்கப்பட்டது.
- பூங்காவனத்தின் போது சுவாமி இருக்கைக்கான தாமரைமலர் ஆசனம் பிரேமதாசன் மங்கையர்கரசி தம்பதியினரால் குணரத்தினம் பத்மாவதி நினைவாக அமைக்கப்பட்டது.
- கஜலக்ஷ்மி ஆலயம் விநோத் காயத்திரி, மகள் ஆத்மிகா ஆகியோரால் உவந்தளிக்கபட்டது. ஏற்கனவே வினோத் அவர்கள் குதிரை வாகனத்தை உபகரித்திருந்தார்.
- வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமி ஆலயம் அமைக்கப்பட்டது. சில திருவிழா உபயகார்களின் உதவியுடன் பரணீதரன் விஷ்ணுவர்த்தினியின் வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமிகள் உபகரிப்புடனும்

பெரும்பங்களிப்புடனும் நிறைவேறியது.

- வைரவர் பண்டிகையும் சிமேந்துக் கலசமும் பரணீதரன் விஷ்ணுவர்த்தினி யால் புனருத்தாரணம் செய்யப்பட்டது.
- நிருத்திகள் பூங்கா அமைக்கப்பட்டது.
- சகடை காத்தவராயர் ஆலய பெண் அடியார்களால் உபகரிக்கப்பட்டது.
- 05.04.2023இல் மகாகும்பாபிஷேகம் இடம் பெற்றது. சிவஸ்ரீ சோமாஸ்கந்தராஜ தனஞ்சயன் அவர்களால் ஆலய சுவாமிகளின் பிரதிஷ்டையும் கும்பாபிஷேகமும் நிகழ திருவருள் பாலித்தது

**ஆலயத்தில் நிகழும் பூசைகள் விபரம்**

- ஆனி உத்தரப் பொங்கல்
- திருவெம்பாவை
- அலங்கார உற்சவம்
- மாதாந்த பூசநட்சத்திர தின அபிஷேகம்
- நவராத்திரி

நடைமுறைகள்

1. அலங்கார உற்சவத்தின் போது வேட்டைக்காக அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயிலுக்கு சுவாமி எழுந்தருளுகின்றார்.
2. ஆனி உத்தரப்பொங்கல் நாளில் காத்தான் கூத்து இடம் பெறுகின்றது.
3. உற்சவ காலத்தில் தினமும் உற்சவகாலப் பேருரைகள் இடம்பெற்று வருகின்றன.
4. உற்சவ காலத்தில் கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன.
5. உற்சவ காலத்தில் சமயப் போட்டிகள் மாணவரிடையே நடத்தப்படுகின்றன.
6. உற்சவ காலத்தில் தினமும் அன்னதானம் இடம் பெற்றுவருகின்றது.

எமது ஆலயத்தின் இப்பெரு வளர்ச்சிக்கு வரசித்தி விநாயகர் காத்தானும் திருவருளே காரணம் இறையைப் பணிந்து அருள் பெற்றுய்வோமாக!

**- கலாநிதி த.கலாமணி**

# காத்தவராய சுவாமி

மனிதன் இயற்கையோடு ஒட்டி வாழத் தலைப்பட்ட காலத்தில் இருந்து சடங்குகளும் சமயங்களும் உருவாகத் தொடங்கின. இயற்கையை வழிபடத் தொடங்கிய மனிதர், அதனைத் திருப்திப்படுத்தப் பல சடங்கு சம்பிரதாயங்களைச் செய்ய முற்பட்டனர். மக்களின் வாழ்க்கையோடு இயைந்த வழக்காறாக, நிலப்பண்பாடாக அவை வளர்ந்தன. சமய வழிபாட்டு முறைகள், சடங்குகள், நம்பிக்கைகள், கலைகள் என பன்முகப்படுத்தப்பட்டன. அவை பற்றி, உரையாடல்கள் , கர்ண பரம்பரை கதைகள், வாய்மொழிப் பாடல்கள், வெறியாடல்கள், கூத்துகள் எனப் பல தளங்களில் பரிணமித்தன. இவை கிராமியத் தெய்வங்களைத் தந்தன. அவற்றின்வழி மேன்மேலும் விரிவாக்கமுற்றன.

இயற்கையோடு இயைந்த வாழ்வில் தெய்வ - சமய நம்பிக்கை என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்து வருகிறது. சமய நம்பிக்கையின் பாற்பட்ட வகையில் சமயச் சடங்குகள், நேர்த்திக்கடன்கள் என்பன மென்பக்தி - வன்பக்தி சார்ந்தவையாக வெளிப்படுத்துகின்றன. மக்களின் நம்பிக்கைப் புலப்பாடுகளாகவும் மக்களிடம் மேலும் நம்பிக்கையை ஊட்ட வல்லனவாகவும் கிராமியக் கலைகள் கட்டமைக்கப்பட்டுள்ளன. தமிழ் சமுதாயமும் இதற்கு விதிவிலக்கல்ல.

தமிழ் சமூகத்தில் நின்று நிலவுகின்ற கிராமியத் தெய்வங்களுள் ஒருவராக காத்தவராயர் சுவாமி காணப்படுகிறார். அவர் “காத்தான்” எனவும் சுட்டப்படுகிறார். காத்தான் பற்றிய கதையாடல்கள் , கதைப் பாடல்கள், உடுக்கடி பாடல்கள் எனவும் தெருக்கூத்தாகவும், மேடைக்கூத்தாக அல்லது சிந்துநடைக் கூத்தாகவும் அது பல நிலைகளில் தமிழர்களிடையே நின்று நிலவி வருகிறது. கூத்து என்ற வகையில் கிறிஸ்தவர்களாலும் காத்தவராயன்கூத்து ஆடப்பட்டு வருகிறது .

**பெயர் பற்றிய உரையாடல்கள்**

சிலப்பதிகாரத்தில் “சாத்தன்” என்ற காவல் தெய்வம் கூறப்படுகிறது. சாத்தன் என்பதை ஐயப்பன் என்னும் ஹரிகரபுத்திரனாக சில ஆய்வாளர் குறிப்பிடுகின்றனர்.

சாத்தன் - காத்தன் - காத்தான் எனவும் கொள்ளலாம். அதேபோல் இராமாயணத்தில் வருகின்ற உத்தரகாண்டத்தில் இராவணனைக் கொல்லக்கூடிய ஆற்றல் படைத்தவனாகச் சுட்டப்பட்ட காத்தவீரியன் என்ற பாத்திரம் “காத்தவராயன்” எனப் பிற்காலத்தில் சுட்டப்பட்டிருக்கலாம்.

சாத்தான், ஐயப்பன், காத்தான் எனும் மூன்றுமே காவல் தெய்வங்களாகக் குறிப்பிட்ட காலம் வரை தனித்தனியே வழிபட்ட தெய்வங்கள். அதிலும் ஐயப்பன் ஹரி - ஹர இணைவினால் பிறந்ததை ஒத்த கதையையே காத்தவராயனின் கதையைக் கொண்டமைந்துள்ளது. சிவன் பெண்ணாகவும் திருமால் ஆணாகவும் உருவெடுத்த காலத்தில் தோன்றிய குழந்தையே காத்தவராயன் எனப்படுகிறார். ஒரு கொடியில் பூத்த மலர்கள் என்பது போல் ஒரே கதை வெவ்வேறு பிரதேசங்களில் வெவ்வேறு விதமாகக் கூறப்பட்டிருக்கலாம். காத்தவராயன் “காத்தவன், காத்தான், காத்தையன் , காத்தமுத்து, காத்தலிங்கர், கத்தலிங்க சுவாமி எனப் பல பெயர்கள் கொண்டு குறிப்பிடப்படுகின்றார். எல்லாப் பெயர்களிலும் “காவல்புரிபவர்” என்ற தொனிப் பொருள் உள்ளடங்கியிருக்கிறது. “காத்தையன்” என்னும் பெயர் திருமுருகாற்றுப்படை யில் முருகனைக் குறித்து நிற்பது குறிப்பிடத்தக்கது. காத்தான் பற்றி எழுந்த பிற்காலக் கதைகள் சில முருகனின் திருவவதாரமாகவே குறிப்பிடுவது ஒப்பு நோக்கத்தக்கது. அதேபோல் காத்தான் என்பதை “காளியால் காக்கப்பட்டவன்“ என்று பொருள் சுட்டப்படுகிறது.

**காத்தவராய சுவாமி பற்றிய கதைகள்**

**1. காத்தவராய நாடகம்** - தக்கன் யாகத்திற்கு ஈசன் மறிக்கவும் நில்லாது சென்று பார்வதி தேவி அவமானப்பட்டு திரும்பியதும் வீரபத்திரர் தோன்றி தக்கன் யாகத்தை அழித்தார். ஈசன் ஈஸ்வரியை பூதலத்தில் பிறந்து பாவம் தீர்ப்பாய் எனக் கூற அப்பாவம் போக்க புத்திரன் வேண்டும் என்றும் இத்தலத்தில் உள்ள நந்தவனங்களைக் காக்கப் புத்திரன் வேண்டும் என்றும் வேண்டியதன் பயனாகப் பிறந்தவரே காத்தவராய சுவாமி.

**2. காத்துமுத்து நாடகம்** - ஈஸ்வரனின் பரிபூரணத்தில் சந்தேகம் கொண்டு அல்லது பரிசோதிக்கும் பொருட்டு ஈஸ்வரி எறும்பு ஒன்றைப் பிடித்து “சிமிலி” ஒன்றினுள் அடைத்து வைத்துள்ளார். அடுத்த நாள் அந்தச் சிமிலியைத் திறந்து பார்த்தபோது அவ்வெறும்பின் வாயில் “நொய்” (அரிசிக் குருணல்) இருக்கக் கண்டு திகைத்துத் தான் செய்த தவறுக்காக ஈசனிடம் மன்னிப்பு கூறியுள்ளார். எறும்பைத் துன்புறுத்திய பாவம் நீங்க பூமியில் பிறந்து நதிக்கரைகளில் பூங்காவனங்கள் அமைத்து விமோசனம் பெறுமாறு ஈசன் கட்டளையிட்டார். அப்போது ஈஸ்வரி பூங்காவனத்தைக் காக்க மகவொன்று வேண்டும் என்று கேட்டதற்கிணங்க முருகன் காத்தவராய சுவாமியாக அவதரித்தார்.

**3. சிவவாக்கியர் போதம்** - தக்கன் தன் யாகத்தில் இடம்பெற்ற தவறை உணர்ந்து வீரபத்திரர் தன்னை அழிக்கும் சந்தர்ப்பத்தில் தான் சிவத்தலங்களில் காவல் தெய்வமாக இருக்க வேண்டும் என வேண்டியதற்கிணங்க அதன் வழி தக்கனே காத்தவராய சுவாமியாக அவதரித்ததாகவும் கூறப்படுகிறது.

**4. காத்தவராயன் கதைப்பாடல்** - சேப்பிள்ளையான் எனும் காவல் அதிகாரியின் வளர்ப்பு மகனே "பரிமளம்" என்ற காத்தவராயன் ஆவார். இவர் பறையர் குலத்தவர். பிராமணப் பெண்ணான ஆரியமாலாவை மணந்து நாட்டைவிட்டு ஓடியவர். இவரைக் கண்டுபிடித்து கழுவேற்றம் செய்ய அரசன் முடிவு செய்ததாகவும் பின்னர் இவர் வாதங்களில் உள்ள நியாயங்களை ஏற்று மன்னித்ததாகவும் ஆயினும் காத்தவராயன் தானாகவே முன்வந்து கழுவேறியதாகவும் இந்நூல் கூறுகிறது. இக்கழுவேற்றத்துக்குக் காரணமாக கைலாசத்தில் சிவனுடன் இருந்த காலத்தில் ஆறு தேவப்பெண்களைக் கண்டு ஆசை கொண்டதாகவும் அதனால் பூவுலகில் பிறந்து அவர்களை மணந்து கழுவேறிச் சாகவேண்டும் என இறைவன் சபித்ததாகவும் கூறப்படுகிறது. இது இரு பெண்கள் மீது ஆசை கொண்ட ஆலகால சுந்தரரின் கதையை ஒத்ததாக உள்ளது.

**5. ஈழத்துக்காத்தான் கூத்து பிரதிகள் -** உள்ளத்தில் பதிப்பிக்கப்பட்ட காத்தவராயன் பாடல்கள், கூத்து பிரதிகள் யாவும் காத்தானை ஆதி சிவனின் மைந்தனாகவும் மாரியம்மனின் வளர்ப்பு மகனாகவும் சுட்டுகின்றன. உமையின் இளைய சகோதரியான மாரியம்மன் திருமணமாகாத கன்னித் தெய்வமாவாள். சிவனும் திருமாலும் மான்களாக மாறிப் பெற்றெடுத்த மான் கன்றை மாரியம்மன் கைகளால் தூக்க அது ஆண் குழந்தையாக மாறுகிறது. அக்குழந்தையை மாரியம்மன் வளர்த்து வரும் காலத்தில் கங்கை பெருக்கெடுத்து இருவரையும் அழிக்க வருகிறது. அப்போது குழந்தை கங்கையை காலால் மறித்துத் தாயைக் காத்தது. வளர்ந்து தாயின் நந்தவனத்தையும் காத்து வந்தது. இவ்விரு காரணங்களாலும் அது காத்தான் எனும் பெயர் பெற்றது.

மேற்குறிப்பிட்ட ஐந்து கதைகளும் காலந்தோறும் காத்தான் பற்றிய பல்வேறு கதைகளாக பிரதேச, கால வேறுபாடுகளுக்கேற்ப வாய்மொழி மரபின் வழி பேணப்பட்டு வந்து நூலுருப் பெற்றுள்ளன. காத்தவராயன் நாடகம் எனும் பிரதியில் மட்டும் கழுவேற்றம் பற்றிய குறிப்பு இல்லை. சிவவாக்கிய போதம் மட்டுமே தக்கனின் அவதாரம் எனக் காத்தனைக் குறிப்பிடுகின்றது. இவை தவிர மேற்சொன்ன கதைகள் பலவற்றையும் உள்வாங்கி பிறிதாக இன்னொரு கதையும் கூறப்படுகிறது.

பார்வதி சிற்றெறும்பை சிமிழியிலடைத்த கதையைக் கூறி இறை சாபத்தால் நந்தவனம் அமைத்து பராமரித்தாள். அதற்குக் காவலாக காத்தான் எனும் ஒரு வாலிபனை நியமித்தாள். சப்த கன்னியர்கள் சித்திரப் பொய்கையில் நீராடிய பின்

இந்நந்தவனத்து மல்லிகை மலர்களைப் பறித்து கொண்டு கைலை சென்றனர். இதனை அவதானித்த காவலாளி அவர்கள் நீராடும் போது அவர்களின் ஆடையை எடுத்து மறைத்ததாலும் ஆடையில்லாததால் இளையகன்னி நீரினுள் நிற்க ஏனையவர் கைலை சென்று சிவனிடம் முறையிட்டதாகவும் கூறப்படுகிறது. இதனால் கோபம் கொண்ட சிவன் காத்தானை "ஏழு பிறவிகள் எடுத்து கழுவேறி இறக்கச் சாபம்" கொடுத்தார். இடைமறித்த பார்வதி "தீயில் உடல் வேகலாகாது" என சாப நீக்கம் அளித்தார். இவ்வாறு இடைமறித்ததால் பார்வதிக்கும் சாபம் வழங்கப்பட்டது. காத்தான் நான்காவது பிறப்பில் தாயை சந்தித்ததும் ஆரியமாலாவை கரம் பிடித்து கழுவேறியதுமாக இக்கதை அமைகிறது. இக்கதை தமிழகப் பிராந்தியங்கள் பலவற்றைச் (கொல்லிமலை, கம்பா நதி) சுட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இக்கதைகள் யாவும் பலவாக அமைந்தாலும் மாரியம்மன் வழிபாடும் காத்தவராய சுவாமி வழிபாடும் கழுமர வழிபாடும் ஒன்றாக நின்று நிலைத்துவிட்டன. மக்கள் மனதில் பெரு நம்பிக்கையை வளர்த்து விட்டன. விஜய நகர காலத்துக்கு முந்தைய கதையாகவும் வழிபாடாகவும் இது கருதப்படுகிறது. பலதாரமணம், பரத்தமை உள்ளிட்ட நாயக்கர் கால வாழ்வியல் இப்பிரதிகளில் காணப்படுகின்றது.

### காத்தவராய சுவாமி கோயில்கள்

மாரியம்மன் கோயில்களில் பெரும்பாலும் கழுமரமும் காத்தவராய சுவாமி சிலையும் வைத்து வழிபடும் மரபு காணப்படுகிறது. தமிழ்நாடு, கேரளா, இலங்கை போன்ற தேசங்களில் செல்வாக்கு மிக்க இக்காவல் தெய்வத்துக்கு தனியான கோயில்கள் தமிழ்நாட்டிலும் கேரளாவிலும் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. மேல்மருவத்தூர் சோத்துப்பாக்கம் காத்தவராயன் கோயில், பாச்சூர் போன்ற இன்னும் சில இடங்களிலேயே தனிக் கோயில்கள் உள்ளன.

ஈழத்தில் அல்வாய், பருத்தித்துறை, திக்கம், வராத்துப்பளை, ஊரணி, நெடியகாடு (வல்வெட்டி துறை), திருகோணமலை, நெடுங்கேணி உள்ளிட்ட பல இடங்களில் தனியான காத்தவராய சுவாமி கோயில்களும், வல்வட்டித்துறை, அல்வாய் - வேலிவத்தை, மாயக்கை, பருத்தித்துறை, தும்பளை, வல்வெட்டித்துறை, அளவெட்டி, திருகோணமலை (நிலாவெளி), புதுக்குடியிருப்பு (முல்லைதீவு), மட்டக்களப்பு (ஊரணி), திருநெல்வேலி போன்ற இடங்களில் உள்ள முத்துமாரியம்மன் கோயில்களோடு இணைந்த காத்தவராய சுவாமி கோயில்களும் காணப்படுகின்றன.

### வழிபாட்டு முறைகள்

காவல் தெய்வங்களுள் ஒரு வகையினராகச் சுட்டப்படும் ஆண் தெய்வங்களுள் காத்தவராய சுவாமி வழிபாடு முக்கியமானது. இத்தெய்வத்திற்கான வழிபாட்டு முறை இரு முறைகளில் நிகழ்த்தப்படுகிறது.

1) மாரியம்மன், காளியம்மன் கோயில் சடங்குகள் நிகழ்த்தப்படும் போது இணைத் தெய்வமான காத்தவராயருக்கும் சடங்கு வழிபாடுகள் நிகழ்த்தப்படும்.

2) பெரும்பாலான மாரியம்மன் கோயில்களில் காத்தவராயருக்கு தனி சந்நிதியோ அல்லது கழுமரம் மட்டுமோ காணப்படுகிறது. மாரியம்மன் அம்மை, பொக்குளிப்பான், சின்னமுத்துப் போன்ற நோய்களைத் தருபவளாகவும் தன்னை வணங்குபவருக்கு நோய் தீர்க்கும் தெய்வமாகவும் கருதப்படுபவள். அதனால் பயபக்தி நிறைந்த வழிபாட்டிற்குரிய தெய்வத்துக்கு குளிர்ச்சிச் (குளிர்த்திச்)சடங்கு நிகழ்த்தப்படும். பொங்கல் பொங்கி வேள்வி நடத்துவர். வேள்வியில் கோழி, ஆடு போன்றவற்றை பலி கொடுக்கும் வழக்கமும் இருந்து வந்துள்ளது. பொங்கலோடு பழவகைகள், பலகாரங்கள், வெற்றிலை, பாக்கு என்பவை வைத்து மடை பரப்புவர். இவ்வாறே காத்தவராய தனி கோயில்களிலும் படைபரப்பப்படும். முன்னைய காலத்தில் காத்தவராயருக்கு இடப்படும் மடைகளில் இறைச்சி, மீன், கள், முட்டை என்பவற்றோடு பல்வேறு வகைத் தானியங்களில் அவிக்கப்பட்ட பிட்டுகளும் மரவள்ளி, தவிடு போன்றவற்றாலான பிட்டுகளும் அவற்றோடு படைக்கப்படும். கருவாடும் சுட்டுப் படைக்கப்படும். பூசாரி எனும் அவ்வக் குலத் தோன்றல் பூசையை செய்வார். வேள்வியின் போது பறைமேளம் இசைக்கப்படும். மத்தளம், உடுக்கு இசைக்கும் வழக்கமும் இருந்துள்ளது.

இத்தோற்கருவிகள் இசைக்கப்படும் போது பூசாரிகளோ அல்லது வேறு எவரோ தெய்வமேறி உருக்கொண்டாடுவர். கலை வந்து விட்டதாக, தமது தெய்வம் அருள் புரிய வந்து விட்டதாகக் கருதி மக்கள் வழிபடுவர். உருவேறியவர் குறி சொல்வார். இறுதியில் வெறியாட்டுவோர் பறையிசை ஒலிக்க செம்பு நீர், கோயில் பிரம்பு என்பவற்றுடன் அருகிருக்கும் நாற்சந்தியையோ அல்லது முற்சந்தியையோ அடைந்து பூசை செய்து எலுமிச்சங்காய்களை வெட்டி எறிவர். அவை நிமிர்ந்து விழும் பட்சத்தில் ”வழிவெட்டிவிடுதல்” சடங்கு சிறப்பாக நடைபெற்றதாகக் கருதப்படும். இதற்குப் பதிலாக கோழி, ஆடு போன்றவற்றை பலி கொடுக்கும் வழக்கமும் இருந்து வந்துள்ளது. சடங்குகள் முடியும் தறுவாயில் தெய்வமாடியோர் சன்னதம் இழந்து நிலத்தில் விழுவர். இது தெய்வம் மலையேறிவிட்டதாகக் கருதப்படும். பின்பு பக்தர்களுக்கு பூசாரி திருநீறு, சந்தனம், தீர்த்தம் முதலியவற்றை வழங்குவார்.

**நேர்த்திக்கடன்**

மக்கள் தமது நம்பிக்கை, வழிபாட்டு முறை என்பனவற்றுக்கேற்ப பல்வேறு நேர்த்திக் கடன்களை தெய்வங்களுக்கு வைப்பர். தம் காரியம் நிறைவேற வைக்கப்படும் நேர்த்திக்கடன்களை காரியம் நிறைவேறிய பின் செலுத்துவர்.

பொங்கல், மடைபரவல், விரதம், காவடி, கரகமெடுத்தல், அலகுக் குத்துதல், முள்ளு மிதியடி நடத்தல் எனப் பலவகையான நேர்த்திக் கடன்கள் உண்டு. மாரியம்மன் - காத்தவராய சுவாமி வழிபாடுகளில் முதன்மையுறும் நேர்த்திக்கடன் "கூத்தாடுதல்" ஆகும்.

காத்தவராயன் கூத்து நேர்த்திக்கடனாக வைத்து ஆடப்படும். காத்தவராயன் கூத்தில் பிரதான காத்தான் பாத்திரத்தை நேர்த்திக்கடன் வைத்தவர் ஏற்றாடுவார். அம்மனுக்கும் காத்தானுக்கும் செய்யும் ஒரு வகை வழிபாட்டு நெறியாகவே காத்தான் கூத்து ஆரம்பத்தில் ஆடப்பட்டது. சின்னான், காத்தான், மாரியம்மன், காளியம்மன் பாத்திரங்கள் கூத்தாடி கொண்டிருக்கும் போதே சன்னதம் செய்தல் உண்டு.

தமிழகச் சூழலில் உடுக்கடிப்பாடல், தெருக்கூத்து, தனியாள் பாடல், கூட்டு முறைப் பாடல் என்னும் தளங்களில் காத்தவராயன் கதை பயிலப்பட்டு வருகிறது. இம்முறையியல்கள் ஈழத்தில் காணப்பட்டாலும் தென்மோடி ஆட்டமுறையில் தனித்துவமான துள்ளல் நடையினையுடைய சிந்துநடைக் கூத்தாக ஆடப்பட்டு வருகிறது. இக்கூத்து வாய்மொழி மரபான அண்ணாவிமார்களால் பேணப்பட்டு வந்துள்ளது. இது பரம்பரை பரம்பரையாக ஆடும் கூத்துக் கலையாகவும் அமைந் துள்ளது. யாழ்ப்பாணம், முல்லைதீவு, திருகோணமலை ஆகிய இடங்களில் இக்கூத்து சிறப்பாக, பரம்பரை பரம்பரையாக ஆடப்பட்டு வருகிறது. நேர்த்திக் கடனுக்கான கூத்து என்ற வகைக்கு அப்பாற்பட்ட தனித்துவமான கூத்துக்கலையாக வளர்ந்துள்ளது. இன்று சாதியம், பரம்பரை என்பவற்றைத் தாண்டி யாவர்க்குமான கலையாகியுள்ளது.

முடிவுரை

காத்தவராயன் சுவாமி வழிபாடு மாரியம்மன் வழிபாட்டோடு இயைந்து வளர்ந்து வந்துள்ளது. ஈழத்தில் வடபுலத்திலே காத்தானுக்கு எனத் தனித்துவமான கோயில்கள் பல காணப்படுகின்றன. காத்தான் பற்றி பல்வேறு விதமான கதைகள் நிலவுகின்றன. துயரம் மிகுந்த காதல் கதையாகவும் இடையிடாத முயற்சியும் இறையருளும் வெற்றி தரும் என்ற கதையாகவும் இது நோக்கப்படுகிறது. காத்தான் காவல் தெய்வம், நோய் நொடியின்றி வாழ வைக்கும் தெய்வம். ஆரம்பத்தில் குறித்த சாதியினருக்குரிய தெய்வமாக நோக்கப்பட்டாலும் காத்தான் கதையின் வளர்ச்சி, அதில் வரும் பல்வேறு சாதியினருக்கு இடையில் இணக்கம் (செட்டி, மலைச்சாதி, பறையர், பஞ்சகம்மாளர்...) போன்றன காத்தானை மக்களின் தெய்வமாகியது. காத்தவராயன் கூத்து மக்களின் கலையாகியதன் ஊடாக காத்தவராய சுவாமி பலராலும் நம்பிக்கையுடன் வழிபடும் தெய்வமாகத் திகழ்கின்றார். கழுமரமும் காத்தானும் இல்லாத மாரியம்மன் கோயில்கள் இல்லை எனலாம். புதுக்கோயில்களும் உருவாக்கி வருகின்றன. ஆகமக் கோயிலை ஒத்த பெருங்கோயில்கள் உருவாகி வருகின்றன. ஆனால் எல்லாக் கோயில்களிலும் மக்களின் "பூசாரியே " பூசகராக

இருப்பது குறிப்பிடத்தக்கது. காத்தானுக்குரிய பூஜையில் பலியிடல் செல்வாக்கிழந்து வருகிறது. கூத்தாடும் நேர்த்திக்கடன் இன்றும் நின்று நிலவுகிறது. காத்தவராய சுவாமி வேண்டும் வரம் அருளும் கிராமிய தெய்வமாக மக்களின் தெய்வமாகிச் செல்வாகுற்று வருகின்றார்.

உசாத்துணை


இராஜேஸ்வரி, கோ., 1992, காத்தவராயன் நாடகம், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தமிழ்நாடு.

பாலசுந்தரம், இ., 1986, காத்தவராயன் நாடகம், நாட்டார் கலைக்குழு வெளியீடு, யாழ்ப்பாணம்

புகழேந்திப் புலவர் , 1929இ காத்தவராய சுவாமி கதைஇ ரத்தின நாயகம் சன்ஸ் இ தமிழ்நாடு.

வானமாமலை, நா., 1971, காத்தவராயன் கதைப் பாடல், மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை.

https://www.vikatan.com/spiritual/temples/147174-glory-of-kathavarayan-temples

https://kchidambara.wixsite.com/kchidambara/blank-y8kfa

https://www.annaviyar.com



**திரு.தி.செல்வமனோகரன்,**
**சிரேஷ்ட விரிவுரையாளர்,**
**சைவசித்தாந்தத்துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

# சிறுதெய்வ வழிபாடு

கிராமிய வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு, நாட்டார் வழிபாடு என்ற வழக்குகின்ற வழிபாடுகளுக்கிடையில் வேறுபாடுகள் காணப்படாலும் இலங்கையில் அச்சொற் பயில்நிலைகளுக்கிடையில் பாரிய வேறுபாடு இருப்பதாக உணர முடியவில்லை. நாகதம்பிரான், இடும்பம், காளி, முத்துமாரி, கண்ணகி, திரௌபதி, பைரவர், வீரபத்திரர், இடும்பன், அனுமன், முனியப்பர், காத்தான், ஐயனார் போன்ற தெய்வங் களை ஆகமம் சாரா முறையிலான வழிபாட்டு முறைகளினூடு வழிபட்டு வருதல் சிறு தெய்வ வழிபாடு எனப்படும். சிவன், விநாயகர், முருகன் போன்ற தெய்வங்களை ஆகம நியதிகளின் அடிப்படையில் வழிபடுவது பெருந்தெய்வ வழிபாடு எனலாம். தெய்வங்களை எமது வசதிகருதி சிறு தெய்வம், பெருந்தெய்வம் என்ற பகுத்துக் கொள்வது ஏற்புடையதோ என்ற கருத்தும் நியாயமானதே. எனினும் வழிபாட்டு முறைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த பாகுபாட்டை மேற்கொள்ளும் வழமையுண்டு.

சிறுதெய்வ வழிபாட்டு முறை நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. பெருந்தெய்வ வழிபாட்டுக்கான வசதி கிடைக்காத, அதற்கான வசதி நிராகரிக்கப் பட்டவர்கள் அதனையும் தாண்டி காலாதிகாலமாக தமது மூதாதையர் வழிபட்டு வந்த தெய்வங்களை ஆதரிக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்த வழிபாட்டுமுறை தொடரப்பட்டு வருகின்றமையைக் காணலாம். இலங்கையில் பல பாகங்களிலும் சிறுதெய்வ வழிபாட்டுமுறைகள் பரவியுள்ளன. உருவங்களை மட்டுமன்றி சிறு கற்கள், சூலங்கள், விருட்சங்கள் போறவற்றை வைத்து வழிபாடியற்றும் முறையும் காணப்படுகின்றனது.

ஆரம்ப காலத்தில் பயத்தை அடிப்படையாகக் கொண்டோ நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டோ இந்த வழிபாட்டுமுறை ஆரம்பித்திருக்கக் கூடும். சங்ககாலத்தில் ஊரை, தமது குடும்பத்தைக் காத்தவர்களை, வீரர்களை கல்வைத்து வழிபடுகின்ற முறைமை காணப்பட்டுள்ளமையை அக்கால இலக்கியங்களின் மூலமும் தொல்காப்பியத்திக் மூலம் அறிய முடிகின்றது. அதேபோல எமது

மக்களிடையே காணப்படுகின்ற சிறுதெய்வ வழிபாட்டுமுறை குடும்பம், சாதி, கிராமம் போன்ற அடிப்படைகளைக் கொண்டும் தோற்றம் பெற்றுள்ளன.

சிறுதெய்வ வழிபாட்டுக்கான பூசை வழிபாடுகள் பெரும்பாலும் பிராமணர் அல்லாதோரால் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. பரம்பரையில் உள்ள ஒருவரே அதனை நெறிப்படுத்துவார். அவருக்குப் பின்னர் அவரது பிள்ளையோ அல்லது அப்பரம்பரையில் தோன்றிய ஒருவரோ அதனை தொடர்ந்து நெறிப்படுத்துவார். சிறு தெய்வ வழிபாட்டிடங்கள் பெரும்பாலும் ஒற்றைக்கூரைகளின் கீழோ மரங்களின் கீழோ மேற்கொள்ளப்பட்டிருந்தன. வருடத்தில் ஒருநாள் முக்கியமான வழிபாட்டு நாளாக இருக்கும். சில வழிபாட்டிடங்களில் தொடர்ச்சியாக விளக்கு வைக்கும் முறையும் உள்ளது. அதாவது நித்திய வழிபாட்டு முறை காணப்படுவதில்லை. இந்த ஆலய வழிபாடுகளில் ஆகம வழிபாட்டு முறைகளில் பின்பற்றப்படும் ஆசாரங்கள் பெரிதும் பின்பற்றப்படுவதில்லை.

ஆண்டில் ஒருமுறை மடை, பொங்கல், பண்டமெடுத்தல், குளிர்த்தி, வேள்வி போன்வற்றில் ஒன்றையோ ஒன்றுக்கு மேற்பட்டவற்றையோ முதன்மைப்படுத்தி நடைபெறும். அன்யை தினம் இரவு வேளையில் ஆலயச் சூழலில் காத்தவராயன் கூத்து போன்ற நிகழ்ச்சிகளை நிகழ்த்துவதுமுண்டு.

இவ்வாலயங்களில் மந்திர உச்சாடனம் பெரும்பாலும் இடம்பெறும். இந்த மந்திர உச்சாடனம் தமிழ் மொழியில் ஒரு விடயத்தை மீண்டும் மீண்டும் பாடி தெய்வத்தை வரவழைப்பதாக அமையும். உடுக்கை, பறை, தாளம் போன்ற இசைக் கருவிகள் பெரிதும் பயன்படுத்தப்படும். சில இடங்களில் பூசாரி கலை ஆடுவதுமுண்டு. அவர் தன்மீது தெய்வத்தை வரவழைத்து கலையாடுவதாக மக்கள் நம்புகின்றனர். அவர் கலையேறப்பெற்று மக்களுக்கு குறிசொல்லுதல், நினைத்த காரியம் சொல்லுதல், கட்டுச் சொல்லுதல் போன்வற்றை நிகழ்த்துவதும் உண்டு. சிறுதெய்வ வழிபாட்டில் மிகுந்த நம்பிக்கை கொண்ட கிராம மக்கள் தமது வாழ்வியலோடு அவ்வழிபாட்டு முறையை நெருக்கமாகப் பிணைத்திருப்பர். வயலில், தோட்டத்தில் கிடைக்கின்ற விளைச்சலின் ஒரு பகுதியையோ, வளர்க்கின்ற ஆட்டுக் கடா அல்லது சேவலையோ கோவிலுக்கு ஒப்படைப்பர். அதுவே கோவிலுக்கான பூசை வழிபாட்டு வருமானமாகவும் அமைந்தது. சில வழிபாட்டுத் தலங்களில் மாமிசம் படைத்து வழிபடும் முறையும் உண்டு.

தமது வீட்டில் காணமல்போன, களவெடுக்கப்பட்ட பொருட்களைக் கண்டுபிடிப்பதற்காக இளைக்கட்டுதல், சத்தியம் செய்தல், பார்வை பார்த்தல், திருநீறு போடுதல், அட்சரக்கூடு கட்டுதல், காவல் செய்தல், பேயோட்டுதல், சூனியம் செய்தல் போன்றவற்றிலும் அவர்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

இலங்கையிலுள்ள சிறுதெய் வழிபாட்டு முறையை அண்மைக்காலமாக

மாற்றங்கள் இடம்பெறத் தொடங்கியுள்ளமையையும் அவதானிக்கலாம். அவர்களது மரபார்ந்த வழிபாட்டு முறைகளிலிருந்து விடுபட்டு ஆகம வழிபாட்டு மரபினை உள்வாங்கி நித்திய பூசைகள் நடைபெறுகின்றன. வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலம், பன்றித்தளைச்சி கண்ணகி அம்மன் ஆலயம், சிட்டிவேரம் கண்ணகி அம்மன் ஆலயம் போன்ற இம்மாற்றத்திற்கு உட்பட்டு விட்டன. சில ஆலயங்களில் நாளாந்த வழிபாட்டு முறைகளை வழமைபோன்று மேற்கொண்டாலும் திருவிழாக் காலங்களில் ஆகம வழிபாட்டு முறைகளைத் தழுவிக் கொள்கின்றனர். எனினும், சிறுதெய்வ வழிபாட்டு முறையிலிருந்து அவை முழுமையாக விடுபடவில்லை என்பதை அங்கு நடைபெறும் பொங்கள், மடை, வழிவெட்டுதல் போன்ற பல வழிபாடுகள் இன்று தொடர்வதிலிருந்து உணர்ந்துகொள்ள முடிகின்றது.

நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு தோன்றி வளர்ந்துள்ள சிறுதெய்வ வழிபாட்டு தனியே ஒரு வழிபாட்டு முறையாக மட்டுமன்றி அக்கிராம மக்களின் அன்றாட வாழ்வியலோடு பின்னிப்பிணைந்ததாகக் காணப்படுகின்றது. ஒழுக்கம், உள ஆற்றுப்படுத்தல், கூட்டிணைவு என பல நல்லியல்புகை இவ்வழிபாட்டு முறை கொண்டுள்ளது. எனவே, அவற்றின் தனித்துவம் கெடாத வைகயில் எமது பிரதேசங்களில் சிறுதெய் வழிபாட்டைப் பேணுவது அவசியமானதாகக் காணப்படுகின்றது.

**அ.பௌநந்தி**

**விரிவுரையாளர்**

**கல்விப்பீடம்**

**கொழும்புப் பல்கலைக்கழகம்**

# சமயச் சின்னங்கள்

விபூதியும் உருத்திராக்கமும் முக்கியமான சைவ சமய சின்னங்களாகும். இவை எமது அஞ்ஞானத்தைப் போக்கி, தீமைகளிலிருந்தும் எம்மைப் பாதுகாத்து இறைவனையும் அவனது பெருங்கருணையையும் நினைவூட்டும் சாதனங்கள். பிரதானமாக நீராடியவுடனும் பூசை வழிபாடுகள் செய்யும் நேரங்களிலும் இவற்றை நாள்தோறும் பக்தி சிரத்தையுடன் தரித்தல் வேண்டும்.

## திருநீறு (விபூ தி)

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் சைவம் எனப்படும். சைவ சமய ஒழுக்கங்களில் இன்றியமையாது சிவ சின்னங்களில் ஒன்றான திருநீறு அணிதலாகும். திருநீற்றுக்கு விபூதி, பசிதம், பசுமம், இரட்சை, ஷாரம் என்ற பெயர்களும் உண்டு.

தன்னைத் தரித்தவர்களுக்கு மேலான செல்வத்தைக் கொடுப்பதால் விபூதி எனவும் ஒளியை கொடுப்பதால் பசிதம் எனவும் பாவங்களை எரித்து நீறாக்குவதனால் பசுமம் எனவும் தன்னை தரித்த ஆன்மாக்கள் எல்லாவற்றையும் இரட்சிப்பதனால், காப்பதனால் இரட்சை எனவும் உயிர்களது மலத்தை நீக்குதலால் ஷாரம் எனவும் பெயர் பெறுகின்றது.

குற்றமற்ற பசுவின் சாணத்தை நெருப்பினாலே சுடுவதனால் உண்டாகும் நீறே தூய திருநீறாகும். திருநீறு வெண்மை நிறமானது. வெள்ளை நிறத் திருநீறு அணியத்தக்கதாகும். ஏனைய நிறத் திருநீறு அணியத்தகாதது. வெண்மை நிறம் தூய்மைக்கு அடையாளம் வெள்ளை நிற திருநீற்றை அணிவதனால் எமது அகமும் புறமும் தூய்மை அடைகின்றன.

இங்கே நீறாக எடுத்துக் கொள்ளும் சாணம் ஆன்மாவையும் சாணத்தில் உள்ள அழுக்குகள் ஆன்மாவோடு உள்ள மலங்களையும். நெருப்பு திருவருளையும், எரிதல் திருவருள் பதிலையும், எரிந்தபின் வந்த வெண்ணீறு மலங்கள் நீங்கத் தூய்மையடையும் ஆன்மாவையும் குறிக்கும் என்பர்.

திருநீறு இருவகையாகத் தரிக்கப்படும். ஒன்று உத்தூளனம் பரவிப் பூசுதலையே இப் பெயர் கொண்டழைப்பர். இரண்டாவது வகை திரிபுண்டர் எனப்படும். திருநீற்றை நீரிற் குழைத்து மூன்று குறியாகத் தரிப்பதனையே திரிபுண்டரம் என்பர். சமயதீட்சை பெற்றோர் மாத்திரமே இவ்வாறு தரிக்கத் தகுதியுடையவர்கள். இவ்வாறு தரிக்கும் போது கீழ்வரும் விதிகள் கவனிக்கப்பட வேண்டியனவாகும். குறிகள் வளையாதும் இடையறாதும் ஒன்றையொன்று தீண்டாதும் அகலாதும் ஒவ்வோர் அங்குல இடைவெளியிருத்தல் போன்றவையே அந்நியதி விதிகளாகும். திரிபுண்டரமாக அணிதற்குரிய உறுப்புக்கள். உச்சி, நெற்றி, மார்பு, கொப்பூழ், முழந்தாள்கள் இரண்டு, புயங்கள் இரண்டு, முழங்கைகள் இரண்டு, மணிக்கட்டுகள் இரண்டு, விலாப்புறங்கள், முதுகு, கழுத்து எனும் பதினாறுமாகும்.

திருநீறு அணியும் பொழுது உத்தம திக்குகளான வடக்கு முகமாகவேனும், கிழக்கு முகமாகவேனும் இருந்து கொண்டு தரித்தல் வேண்டும் அதனைத் தரிக்கும்போது சிவபெருமானைத் தியானித்துப் பரமாணுவளவாயினும் நிலத்திலே சிந்தாவண்ணம் அண்ணாந்து “சிவ சிவ” என்று சொல்லிக் கொண்டு வலக்கையின் நடுவிரல் மூன்றினாலும் தரித்தல் வேண்டும்.

திருநீறு தரிக்கப்பெற வேண்டிய காலங்களாவன சந்தியாகாலம் மூன்றும் (காலை, உச்சி, மாலை) சூரியோதயம், சூரிய அஸ்தமனம், நித்திரைக்கு முன்னும் பின்னும் பல்துலக்கியவுடனும், நீராடியவுடனும், பூசைக்கு முன்னும் பின்னும் உணவுக்கு முன்னும் பின்னும் தம் கடமைகளைச் செய்யச் செல்லும் போதும் சிறப்பு நிகழ்ச்சிகளின்போது கட்டாயமாகத் திருநீறு அணிதல் வேண்டும்.

குரு சிவனடியார் முதலியோர் திருநீறு தந்தால் அமைதியாக அடக்கத்துடன் அவர்களை வணங்கி இரு கைகளையும் நீட்டி பெற்று அணிதல் வேண்டும்.

திருநீற்றுக்கு மேலே சந்தனமும் குங்குமமும் அணிதலாகாது திருநீற்றுக்கு கீழே புருவ நடுவில் அவற்றை தரிக்கலாம் திருநீறு அணியாதவர் முகம் சுடுகாட்டுக்கு சமமாகும். “நீறில்லா நெற்றி பாழ்” என்பதும் இதனை ஒட்டியதே என்பதைத் தெரிந்து கொள்ளவும்.

திருநீற்றின் மகிமை ஆளுடைய பிள்ளையார் அருளிய திருநீற்றுப் பதிகத்தில் விரிவாகவும் மற்றையோர் பாடல்களில் பரவலாகவுங் கூறப்பட்டுள்ளது.

திருநீறணிவதனால் முத்தியும் சிவஞானமுங் கைகூடுமென அருள் நூல்கள் கூறுகின்றன. “முத்தி தருவது நீறு”, “போதந்தருவது நீறு” “சித்திதருவது நீறு” “சுந்தரமாவது நீறு” “தேசம் புகழ்வது நீறு” என்னும் சம்பந்தர் திருவாக்குகளால் இதனை நாம் உணரலாம்.

ஒருவன் திருநீறு அணியும் பொழுது அத்திருநீறு படிகின்ற இடமெல்லாம் சிவலிங்கமாகின்றதெனச் சைவ நூல்கள் கூறுகின்றன.

**திருநீற்றின் பெரும்பயன்கள்**

பாவம் ஒழிந்தால் அடுத்தநிலை பரகதியேயாகும். மண்ணுலக வாழ்வு முடிந்து விட்டால் அதன் பின்னர் விண்ணுலக வாழ்விற்குச் செல்ல வேண்டும் என்பது ஆண்டவன் நியதி. இதனைப் பட்டினத்தடிகள் “வினைப்போகமே ஒரு தேகம் கண்டாய் வினைத்தான் ஒழிந்தால் தினைப்போதளவும் நில்லாது கண்டாய்” எனப்பாடி உணர்த்துகின்றார்.

சிவபெருமானும் வானுலகத்தேவர்களும் திருநீறு அணிந்திருக்கின்றார்கள் என்னும் உண்மையினை இறைவனைக் கண்டவர்கள் தங்கள் அருள் வாக்குகளிலே கூறியிருக்கிறார்கள். சம்மந்தர் “வானவர் மேலது நீறு” என்றும் “மேலுறைத் தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு” என்றும் பாடி தேவர்கள் திருநீறு அணிந்திருத்தலைக் கூறினார். “தோடுடைய செவியன் விடையேறி ஓர் தூவெண்மதி சூடிக் காடுடைய சுடலைப்பொடி பூசியென் உள்ளம் கவர்கள்வன்” என்று பாடி சிவபெருமான் திருநீறு அணிந்திருத்தலைக் கூறினார். “காடுடைய சுடலைப் பொடிபூசி” என்பது சாணியினால் உண்டாக்கப்பட்ட எருக்கட்டிகள் சுடுகாட்டில் அடுக்கப்பெற்று அவை எரிந்த சாம்பலேயாகும்.

திருநாவுக்கரசர் “பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறு” என்று பாடி சிவபெருமான் திருநீறு அணிந்திருந்ததை உணர்த்தினார் மாணிக்க வாசகப்பெருமான் “வெண்ணீற்றான்” என்று சிவனைக் குறிப்பிடுகிறார். “சிவனும், தேவர்களும் தங்கள் உடம்பில் எப்போதும் வெண்ணீறு பூசியவர்களாய் விளங்குகிறார்கள். இறைவனை வணங்கி அன்பர்களும் அவ்வாறே திருநீறு அணிந்துகொள்வது முறையாகும்.

“கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை

மங்காமற் பூசி மகிழ்வதே யாமாகில்

தங்கா வினைகளுஞ் சாரும் சிவகதி

சிங்கார மான திருவடி சேர்வரே”

(திருமூலர்)

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு

சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு

தந்திர மாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு

செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே

(சம்பந்தர் தேவாரம்)

**உருத்திராக்கம்**

உருத்திராக்கம் என்பது உருத்திரனது கண் எனப் பொருள்படும். திரிபுரத்தசுரர்களாலே தமக்கு ஏற்பட்ட துன்பங்களைப் பற்றித் தேவர்கள் சிவபிரானிடம் முறையிட்டபோது சிவபிரானது மூன்று கண்களினின்றும் சிந்தியமணியே உருத்திராக்கம் என்பர். எனவே ஆன்மாக்களிடம் இறைவன் கொண்டுள்ள பெருங்கருணையைச் சதா நினைவூட்டும் சாதனமாக உருத்திராக்கம் விளங்குகிறது. இதனை அணிதல் அவரது திருவருட் பேற்றுக்கு அறிகுறி. பத்தினிப் பெண்களுக்குத் திருமாங்கலியம் எங்ஙனம் புனிதமான ஆபரணமாக விளங்குகிறதோ அங்ஙனமே சிவனடியார்களுக்கு உருத்திராக்கம் போற்றி அணிய வேண்டிய புனிதச் சின்னமாகத் திகழ்கிறது.

உருத்திராக்க வகைகள்: ஒரு முகம் தொடக்கம் பதினாறுகம் வரை கொண்ட மணிகள் உண்டு ஒவ்வொரு வகை மணிக்கும் ஒவ்வொரு அதி தேவதை கூறப்படுகிறது. பொன்னிறம், கருநிறம், கபில நிறம் ஆகிய நிறங்களில் உருத்திராக்க மணிகள் உள்ளன. ஒரே இன மணிகளாலான மாலைகளே அணியத்தக்கன.

சந்தியாவந்தனம், சிவபூசை, செபம், தேவார திருவாசக பாராயணம், புராணபடனம், சிவாலய தரிசனம் போன்ற சாதனைகளை செய்யும் காலங்களில் உருத்திராக்கம் தரித்தல் அவசியம். உறங்கும் போதும் மலசலங்கழிக்கும் போதும் அசௌவ காலத்திலும் தரிக்கலாகாது சோதரமற்றோரும் தரிக்கலாகாது. சிவதீட்சை பெற்றவர்கள் இதை அணிய வேண்டும். சிகை, சிரம், காது, மார்பு, தோள்கள், கைகள் ஆகியவை உருத்திராக்கம் அணிவதற்குரிய இடங்கள். எத்தனை முகங்கொண்ட மணிகளை எவ்வெவ் இடங்களில் அணியலா என்றும், ஒவ்வோர் இடத்திலும் தரிக்கும் மாலை எந்த அளவினதாய் இருக்க வேண்டுமென்றும் விதிகள் உண்டு. செபம் செய்ய உபயோகிக்கும் மாலை 108 அல்லது 54 மணிகளைக் கொண்டதாயிருக்கும். செபமாலை மனத்தை இறைவனிடம் செலுத்தும் சிறந்த சாதனமாகும்.

பாவங்களைக் கண்டிப்பதனால் உருத்திராக்க மாலை கண்டினை எனப்பெயர் பெற்றது. "உருத்திராக்க ஜாபாலம்" என்ற உபநிடதமும் ஏனைய உயர்ந்த சாத்திரங்களும் உருத்திராக்கத்தின் உயர்வை உரைக்கின்றன.

நீராடும் போது உருத்திராக்கத்தின் மீது பட்ட நீர் நம் உடம்பில் படுவதால் மிகுந்த நன்மை உண்டாகும். உருத்திராக்கம் தலை, கழுத்து, மார்பு, கை முதலிய அங்கங்களில் தரித்துக் கொள்ள வேண்டும். உருத்திராக்க மணி தரியாமல் பூசை செய்வோர் பூசையின் பயனை பெறாது ஒழிவர்.

பூண்பதற்குக் கண்டியினைக் கூசியிடும் புல்லியரைக்
காண்பதங்குக் கூசுமரன் கைத்து சைவசமய நெறி

- திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

**குங்குமம்**

இலக்குமி திலகம் அணிந்த சிறப்பைச் “செய்யாள் புனைந்த திலகம்” என்று பரிபாடல் பாடியுள்ளது. கூந்தலின் வகிட்டிலும், நெற்றியின் மையத்திலும் குங்குமத் திலகமிடுவது மிகப் பழைய பண்பாடு ஆகும். அவை இலக்குமி இருக்கும் இடங்களாக கருதப்படுகின்றது. ஒரு சுமங்கலியின் மஞ்சள் முகம் மங்களப் பொழிவுடன் திகழுவதற்கு காரணம் அவள் அணிந்த குங்கும திலகம் ஆகும்.

பராசக்தியின் அடையாளம் செந்நிறம். சக்தியின் செயல் ஆற்றலைக் குறிக்கும் இறைவனின் திருவருளாகிய பராசக்தியின் துணைகொண்டு ஒவ்வொரு செயல்களையும் புரிகின்றோம் என்பதையும் மங்கலம், செல்வம், நன்மை முதலியவைகளையும் குங்குமம் குறிக்கின்றது. ஒரு சாரார் கற்பின் மகிமைச் சின்னம் குங்குமம் என்றும் ஓர் சாரார் மாங்கலியச் சின்னம் என்றும் கூறுவர். முதலில் சந்தனத்தால் திலகமிட்டதும் சிவனின் நெற்றிக் கண்ணை நினைவூட்டும் பின் சந்தனத் திலகத்தின் மேல் சிறிய குங்குமத் திலகம் இடுகிறோம். இது சிவத்தில் சக்தி அடக்கம் என்பதனை வெளிப்படுத்தும் குங்குமத்தை மோதிர விரலால் தொட்டு புருவ மத்தியில் வைக்க வேண்டும்.

**சந்தனம்**

நெற்றியின் நடுப்பகுதி இறைவன் உறையும் இடங்களில் ஒன்றாகும். இறைவனை தியானிக்கும் போது அங்கு இயங்கும் முக்கிய நரம்புகள் சூடாகின்றன. இச்சூட்டை தணிக்க நெற்றி நரம்போட்டத்தின் மீது குளிர்ந்த சந்தனத்தை புனைகின்றனர். இது நறுமணங்கலந்த சந்தன மரத்தில் இருந்து செய்யப்படுகின்றது. இறைவனை நெற்றிக் கண்ணை நினைவூட்டுவதற்கு அடியார்கள் சந்தனத்தை அணிகின்றார்கள்.

**– வரதவேல் மிதுஷா**

## உபயம், அன்பளிப்புகள்

# வில் மண்டப முகப்பு கோபுரம்

**உபயம் - பொன்னையா தருமசோதி அவர்களால், நாகமுத்து தங்கம், பொன்னையா மாணிக்கம் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்டது.**

செலவு விபரம்

1. முகப்பு கோபுர கூலி 250000.00
2. 2 தூண் போட்ட கூலி 19000.00
3. 2 தூண் 1 லிண்டர் பூச்சு கூலி 27000.00
4. பலகை அடித்த கூலி 25000.00
5. கொன்கிறீற் போட்ட கூலி 15000.00
6. கம்பி 51000.00
7. 22 பக்கற் சீமெந்து 22 X 2800 61600.00
8. 1 லோட் மண் 18000.00
9. 1/2 லோட் பூச்சு மண் 9000.00
10. 1/2 லோட் சல்லி 14000.00
11. 180 கொன்கிறிற் கல்லு 180 X145 26100.00
12. 330 செங்கல் 330 ஒ 28 9240.00
13. நின்று வேலை செய்யும் 9 கம்பி வாடகை(10 நாள்) 4500.00
14. சப்போட்டிங் வாடகை 10 நாள் X 600.00 6000.00
15. ஏற்றுக்கூலி சப்போட்டிங், கம்பி 3000.00
16. சாப்பாட்டு செலவு 11560.00

மொத்தம் 550000.00

வில் மண்டப, வெளி மடத்துக்கான 8 பனைமரங்கள் தவநேசன், தர்மஸ்ரீ தம்பதிகளால் வழுங்கப்பட்டது.

# கஜலக்சுமி

**உபயம் - வினோத் காயத்திரி தம்பதிகள், மகள் ஆத்மிகா**

1. 1 லோட் கண்டகல - 29000.00
2. 1.5 லோட் மண் - 31000.00
3. 1 லோட் பூச்சு மண் - 21000.00
4. 400 கொங்கிறீற் கல் - 58000.00
5. 400 செங்கல் - 12000.00
6. சிமேந்து 23 X 3000 -69000.00
7. கட்டடக்கூலி - 225000.00
8. கருங்கல் சிலை - 65000.00
9. கதவு - 15000.00
10. கதவு சாமான், பூட்டு கூலி - 5000.00
11. கல் அம்மன" - 37000.00
12.பீட மாபிள் - 3600.00
13. பொயின், பொயின் கூலி - 50000.00
14. மாபிள் வைத்த கூலி - 2250.00
15. செங்கல் ஏற்றுக்கூலி - 1200.00
16. திருவாசி - 8500.00

மொத்தம் - 632250.00

## முருகன் வள்ளி தெய்வானை

**உபயம் - திருவிழா உபயகாரர்கள் ( எல்லோரும் பங்களிக்கவில்லை)**

1. 1 லோட் கண்டகல - 29000.00
2. 1.5 லோட் மண் - 31000.00
3. 1 லோட் பூச்சு மண் - 21000.00
4. 400 கொங்கிறீற் கல் - 58000.00
5. 400 செங்கல் - 12000.00
6. சிமேந்து 23 X 2800 -67200.00
7. கட்டடக்கூலி - 225000.00
8. கருங்கல் சிலை - 95000.00(உபயம்  பரணீதரன் விஷ்ணுவர்த்தினி)
9. கதவு - 15000.00
10. கதவு சாமான், பூட்டு கூலி - 5000.00
11. கல் முருகன் - 25000.00
12. பீட மாபிள் - 3600.00
13. பொயின், பொயின் கூலி - 50000.00
14. மாபிள் வைத்த கூலி - 2250.00
15. செங்கல் ஏற்றுக்கூலி - 1200.00
16. திருவாசி - 12000.00

மொத்தம் - 651250.00

## பூங்காவனத்தாமரை

**உபயம் - பிறேமதாசன் மங்கையர்கரசி தம்பதிகளால் குணரத்தினம் பத்மாவதி ஞாபகார்த்தமாக உபகரிக்கப்பட்டது.**

கூலி - 40000.00

பொருட்செலவு, பொயின்ட் - 30000.00

மொத்தம் - 70000.00

## வைரவர் பண்டிகை, கலசம்

**உபயம் - பரணீதரன் விஷ்ணு வர்த்தினி**

கூலி - 60000.00

பொருட்செலவு - 20000.00

வைரவர் கற்சிலை - 25000.00

மொத்தம் - 105000.00

## கிருஷ்ணர் தெற்கு மதில்

**உபயம் - பரணீதரன் விஷ்ணுவர்த்தினி**

கூலி - 9000.00

பொருட்செலவு - 11000.00

மொத்தம் - 20000.00

## சிறகுமண்டப 6 திருவாசி
**உபயம் - பரணீதரன் விஷ்ணுவர்த்தினி**

கூலி - 210000.00

பொருட்செலவு - 10000.00

பொயின்டிங் - 50000.00

மொத்தம் - 261000.00

## கடவுள் பாவைகள் அன்பளிப்பு

1. பெரிய பிள்ளையார் - தர்மசோதி பொன்னையா -30000.00
2. மீனாட்ச்சி அம்மன் - தர்மசோதி பொன்னையா 20000.00
3. சிவன் - தர்மசோதி பொன்னையா - 20000.00
4. விஷ்ணு - தவனேஸ்வரன் தர்மசிறி - 20000.00
5. அம்மன் - வினோத் காயத்திரி - 25000 .00
6. காத்தவராயர்- முரசொலிமாறன் மிதுர்சனா - 25000.00
7. சரஸ்வதி - அபிராமி தீட்சண - 20000.00
8. பிள்ளையார் - கிருஷ்ணபிள்ளை தங்கப்பொன் - விக்னேஸ்வரன் - 15000.00(தந்தது) 20000 பெறுமதி
9. முருகன் - கிருஷ்ணபிள்ளை தங்கப்பொன் - விக்னேஸ்வரன் - 15000.00(தந்தது) 20000 பெறுமதி
10. வைரவர்(சுற்று பிரகாரம் பொம்மை) - பரணீதரன் விஷ்ணுவர்த்தினி - 25000.00
11. முருகன்(சுற்று பிரகாரம் பொம்மை) - பரணீதரன் விஷ்ணுவர்த்தினி - 25000.00
12. கஜலட்சுமி (சுற்று பிரகார பொம்மை) - வினோத் காயத்திரி - 37000.00
13. 2 பசுக்கள் - அருணாச்சலம் சக்திவேல்

**ஏனைய அன்பளிப்புகள்**

1. மின் இணைப்பு, பொருட்கள் - கஜலக்சுமி, முருகன், முன் திருவாசிகள், முகப்பு - குணரத்தினம் விநாயகதாசன், மின்இணைப்பாளர்கள் - ஜெ.தனுசன், வி.விஜிதன்
2. பெரிய டாசர் - வித்தியா நிவேதனன்
3. 5 பல்ப் 400 பெறுமதியானது - கிருஷ்ணானந்தம் பவிகரன்

## களஞ்சிய அறை

**உபயம் - பரணீதரன் விஷ்ணுவர்த்தினி - 50000.00**

# கும்பாபிஷேக வரவுகள்

| | |
|---|---|
| 1.செல்வரட்ணம்(அரி) அனுஷா | - 50000.00 |
| 2. சோபியா தீக்சனா | - 10000.00 |
| 3. கலாநிதி லதா | - 25000.00 |
| 4. ஜெ.சிவானுகா | - 5000.00 |
| 5. கந்தன் மகேசன் | - 15000.00 |
| 6. தீபா ஜெயச்சந்திரன் | - 15000.00 |
| 7. தங்கமயில்(நவராஜ்) நிவேதிகா | - 2000.00 |
| 8. விஜயநாதன் சாரதாவதி | - 25000.00 |
| 9.தர்மரத்தினம் கலாவதி | - 25000.00 |
| 10. ச.சி .பரஞ்சோதி | - 5000.00 |
| 11. ச.சசிகாந் | - 5000.00 |
| 12.நி.லவகார்த்திகேயன் | - 5000.00 |
| 13.மகிந்தன் சிவிரா | - 1000.00 |
| 14. பிரதாப் பிரகீதன் | - 1000.00 |
| 15. பாரதிதாசன் ஆதீஸ் | - 2000.00 |
| 16. சிவகுருநாதன் துவாரகன் | - 10000.00 |
| 17.மகேந்திரராஜா ஸ்ரீநந்தனா | - 20000.00 |
| 18. பாக்கியநாதன் சுகந்தி | - 2000.00 |
| 19. ரதீபன் தூரிகா | - 2000.00 |
| 20. சிவசங்கர் சராசா | - 5000.00 |
| 21. சிவதாசன் சிவபாக்கியம் – மகள் பேபி | - 2000.00 |
| மொத்தம் | - 232000.00 |

# முருகன் சுற்றுப்பிரகாரத்திற்கு பங்களித்த உபயகாரர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 ம் திருவிழா | - | 1. க.முரளீதரன் & த. கலாமணி | - 20000.00 |
| 2. ம் திருவிழா | - | 1. ஆனந்தராசா சிவமலர் | - 30000.00 |
| | | 2. குணாதீசன் ஆனந்தி | - 20000.00 |
| | | 3. கதிர்காமநாதன் உமா | - 5000.00 |
| | | 4. ரஜனிகாந்த் வள்ளி மயில் | - 3000.00 |
| | | 5. ரவிநேசன் மணிமேகலை | - 3000.00 |
| | | 6.இராசையா கமலாதேவி | - 3000.00 |
| | | 7.கருணாகரன் சறோசாதேவி | - 3000.00 |
| | | 8. செல்வநாதன் மங்களம் | - 3000.00 |
| | | 9. ஸ்ரீதரன் மல்லிகா | - 3000.00 |

| | | |
|---|---|---|
| | 10.அன்ரன் யசோ | - 3000.00 |
| | 11. சுப்பிரமணியம் குணரஞ்சிதம் | - 3000.00 |
| | 12. செல்வரத்தினம்(குஞ்சு) | - 3000.00 |
| | 13. ஜெயராசா மதுரத்தேவி | - 3000.00 |
| | 14. அபிராமி மகேந்திரராசா | - 3000.00 |
| | 15. சிவபாதம் மகாதேவி | - 3000.00 |
| 3 ம் திருவிழா | 1. வி.கவிச்செல்வன் | - 3000.00 |
| | 2. கிருஷ்ணானந்தம் பவி | - 1000.00 |
| | 3. ஜீவாகரன் வேணுகா | - 1000.00 |
| | 4. பிரணவன் வசந்தகுமாரி | - 3000.00 |
| | 5. சத்தியநேசன் கலாயினி | - 3000.00 |
| | 6. கணேசலிங்கம் ஜெயந்தி | - 3000.00 |
| | 7. சர்வேஸ்வரன் கிருஷா | - 1000.00 |
| | 8 கலைவாணி குபேந்திரன் | - 3000.00 |
| | 9.குகேந்திரன் ராகினி | - 1000.00 |
| | 10.இராசநாயகம் சந்திரா | - 1000.00 |
| | 11. சபநாயகம் பகவதிஅம்மா | - 2000.00 |
| | 12. கிருஷ்ணா லீலா | - 3000.00 |
| 4ம் திருவிழா | 1. தாரணி ஸ்ரீதரன் | - 2500.00 |
| | 2. உதயணன் தர்சிகா | - 2500.00 |
| | 3. நவரத்தினம் சத்தியவதி | - 10000.00 |
| 5ம் திருவிழா | 1. சர்வநிதி அனித்தா | - 3000.00 |
| | 2. வி.சுந்தரலிங்கம் | - 3000.00 |
| | 3. தி.செல்வநாதன் | - 5000.00 |
| 6ம் திருவிழா | 1. ரேவதி தவராஜா | - 1000.00 |
| 7. ம் திருவிழா | 1. சுரேஷ் குமார் தயாவதி | - 3000.00 |
| | 2. சிவதாஸ் பாக்கியவதி | - 3000.00 |
| | 3. தவம் ரேவதி | - 3000.00 |
| | 4. சிவதாஸ் விஜயஸ்ரீ | - 3000.00 |
| | 5. சிவதாசன் வேல்முருகா | - 3000.00 |
| | 6. செல்வலிங்கம் சிவராணி | - 3000.00 |
| | 7. சசிகுமார் கஜேந்தினி | - 3000.00 |
| | 8. சுரேஷ்குமார் விக்னா | - 3000.00 |

| | | |
|---|---|---|
| 8ம் திருவிழா | 1. சிவனேஸ்வரன் தயாளினி | - 5000.00 |
| | 2.இரத்தினேஸ்வரன் உதயமலர் | - 3000.00 |
| | 3. அ.சக்திவேல் | - 3000.00 |
| 9. ம் திருவிழா – | 1. ரூபேஷ் சுகன்யா | - 4000.00 |
| | 2. பிரேமவதி | - 3000.00 |
| | 3. ஜெயகொடி லீலாவதி | - 3000.00 |
| 10 ம் திருவிழா – | 1. பரணீதரன் விஷ்ணுவர்த்தினி (முருகன் எழுந்தருளி - 95000.00) | - 413000.00 |
| | 2. தவனேஸ்வரன் தர்மசிறி | - 3000.00 |
| | 3. அரியரத்தினம் ஜெயசக்தி | - 7000.00 |
| | 4. கமலேந்திரம் கீதாமணி | - 3000.00 |
| | 5. வ.பர்வதாமணி | -3000.00 |
| | 6. வ.அரவிந்தன் | - 3000.00 |
| | 7. மா. கருணாநிதி | - 5000.00 |
| | 8. சுபாஷ் சாமினி | - 3000.00 |
| | 9. பாரதிதாசன் வசந்தமதி, ஆர்த்திகன் | - 3000.00 |

முருகன் சுற்றுப்பிரகார மொத்த செலவு - 651250.00

## கும்பாபிஷேக செலவுகள்

| | |
|---|---|
| 1. ஐயர் தட்சணை | - 100000.00 |
| 2. மேளம் | - 20000.00 |
| 3. ஆசாரியார் | - 30000.00 |
| 4. ஏனைய பிரகார பெயின்டிங் செலவு | - 125000.00 |
| 5. நாதன் மருந்துக்கடை | - 22400.00 |
| 6. மருந்து | - 6600.00 |
| 7.தேங்காய் 100 X 50 | - 5000.00 |
| 8. மரக்கறி | - 5445.00 |
| 9. பழம் | - 1770.00 |
| 10. சட்டி | - 560.00 |
| 11.பாய் தலையணை 2 | - 1350.00 |
| 12.கற்பூரம் | - 4000.00 |
| 13. ஆசாரி வேட்டி 2 | - 5000.00 |
| 14. ஐயர் வேட்டி 4 | - 9500.00 |

**ஏனைய அனைத்து செலவு விபரங்களும் 19 ம் திகதி தரப்படும்.**

**இந்த நூலில் அடங்கியுள்ள வரவுகள் அனைத்தும் 2023. 04.04 இரவு 12 மணிவரை பெறப்பட்டவை.**

அல்வாய்

## அருள்மிகு வரசித்தி விநாயகர் உடனுறை

# காத்தவராயர் தேவஸ்தானம்



## புனராவர்த்தன மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

**05.04.2023 புதன்கிழமை காலை 6.55 – 8.07 மணிவரை**

அல்வாயூர் எல்லையிலே இனிதமரும் குலதெய்வம்
பல்காலும் எல்லவர்க்கும் அருள் தெய்வம் – வல்லோனாய்
திரோதான சக்தி தரம் காத்தான் உடனுறையும்
வரசித்தி விநாயகரை வாழ்த்து

மெய்யடியார்களே!

சுப மங்களம் நிறைதரு சுபகிருது வருடம் பங்குனித்திங்கள் 22 ஆம் நாள்(05.04.2023) புதன்கிழமை உத்தர நட்சத்திரம் மேட இலக்கினம் அமிர்த சித்தயோகம் கூடிய காலை 6.55 – 8.07 மணிவேளை அமைந்த சுபமுகூர்த்த சுப தினத்தில் அல்வாய் அருள்மிகு வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் சுவாமிக்கு கும்பாபிஷேகம் நிகழ திருவருள் பாலித்துள்ளது. அத்தருணம் அடியார்கள் பக்தி சீலர்களாகி வந்து சுவாமியின் பெருவருள் பெற்றேகுமாறு அழைக்கின்றோம். அத்தோடு புதிதாக அமைக்கப்பெற்ற பிரகார பாலாலயங்களில் கஜலஷ்மி, வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமி ஆகியோரின் பிரதிட்டையும் கும்பாபிஷேகமும் இடம்பெறும்.

**கிரியா விபரம்**

03.04.2023 திங்கட்கிழமை பி.ப 3.10 தொடக்கம் ஆரம்ப கிரியைகள் ஆரம்பமாகி சுவாமி இருத்தல் இடம்பெறும்.
04.04.2023 செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணி முதல் எண்ணெய்க் காப்பிடல், ஸ்பரிச வாகுதி முதலாய கிரியைகள் இடம்பெறும்.
05.04.2023 காலை 6.55 – 8.07 மணிவரை – மஹாகும்பாபிஷேகம்
மு.ப. 10.30 மணி – மஹா கும்பாபிஷேக மலர்வெளியீடு
மு.ப. 11.30 மணி – மகேஸ்வர பூசை இடம்பெறும்

**குருமார் விபரம்**

முகூர்த்த நிர்ணயம் : பால சோதிட சிந்தாமணி சிவஸ்ரீ திருஞானசுந்தர திருஞானசம்பந்தக் குருக்கள்
பிரதிஷ்டா பிரதமகுரு : சிவஸ்ரீ சோமாஸ்கந்தராஜ தனஞ்சயன் குருக்கள் அவர்கள்
உதவிக்குருக்கள்: 1. சர்வசாதக ஆசிரியர் சிவஸ்ரீ சி. குபேரன் குருக்கள்
2. சர்வபோதகம் இ. சுந்தரலிங்கக் குருக்கள்– நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் பிரதமகுரு
3. சர்வ போதகம் பி. திருஞானசம்பந்தக் குருக்கள் – குமிழமுனை கற்பக விநாயகர் ஆலய பிரதம குரு
4. சர்வபோதகம் ச. பிரசன்னக் குருக்கள் – திருக்கோணேச்சரம் பிரதமகுரு
நித்திய பூசகர் : கலாமணி பரணீதரன்

மங்கள வாத்தியம் : மங்கள இசைவாருதி T.S. செல்வரத்தினம் குழுவினர்(ரஞ்சன்)
நாதஸ்வர கானமூர்த்தி T.S. நிமலன்
ஒலி அமைப்பு : குரு சவுண்ட்ஸ்

**– க.பரணீதரன் – காத்தவராயர் தேவஸ்தானம் –**